DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 546/2024

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : நிர்மலா

Husband's Name : பார்த்தசாரதி

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாங்கப்பாளையத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். 07.07.2024 ம் தேதி எனது தங்கை லதா, அவரது கணவர் கென்னடி பொங்களுரிலுள்ள அவர்களது மகள் சுகன்யா வீட்டிற்கு

சென்றுவிட்டார்கள். எனது தங்கையின் இரண்டாவது மகள் பிரியங்கா வீட்டில் தனியாக இருந்ததால் 08.07.2024ம் தேதி என்னுடைய வீட்டிற்கு வந்து தூங்கிவிட்டு மறுநாள் காலை வேலைக்கு சென்றுவிட்டார். அன்று மதியம் 01.30 மணியளவில் என்னுடைய வீட்டிற்கு வந்து பிரியங்காவின் வீடு திறந்திருப்பதாக கூறி என்னை அழைத்துக் கொண்டு அவரது வீட்டிற்கு சென்றார். நான் பிரியங்காவின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, வீட்டிற்கு வெளியே இருந்த கேட்டின் பூட்டு உடைந்திருந்தது. வீட்டின் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது, பீரோவும் திறந்து துணிகள் கலைந்து கிடந்தது. பிரியங்கா என்னிடம் பீரோவிலிருந்த 13 பவுன் தங்க நகைகளும் பணம் ரூ.5000/-மும் காணவில்லை என்று கூறினார். பிறகு பிரியங்கா அவரது அம்மா மற்றும் அப்பாவிற்கு போன் செய்து மேற்படி தகவலை கூறினார். பின்னர், பிரியங்கா மற்றும் அவரது அம்மா அப்பா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் தொடர்பாக யார் புகார் கொடுத்தார்கள் என்றால் எனது தங்கை லதா மற்றும் அவரது கணவர் கென்னடி என்பவர்கள் புகார் கொடுத்தார்கள். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை எனது தங்கை வீட்டில் வைத்து திருட்டுபோன அன்றே என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனது தங்கை மகள் பிரியங்கா எனது வீட்டிற்கு வரவும் இல்லை என்றாலும், எனது வீட்டில் தங்கவும் இல்லை என்றாலும், அவரது வீட்டில் நகைகள் காணாமல் போகவும் இல்லை என்றாலும்,

பூட்டை உடைக்கவும் இல்லை என்றாலும், பீரோவை உடைக்கவும் இல்லை என்றாலும், எனது தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 546/2024

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | தனபால் |
| Father's Name | : | ரத்தினம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உப்பிடமங்கலம், சமத்துவபுரத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சொந்த வேலையாக நேரம் ஞாபகமில்லை, வெள்ளியணை காவல் நிலையம் சென்றிருந்தேன். அங்கு போலிசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம்

கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 2.08.2024ம் தேதி நான் வீட்டிலிருந்தபோது வெள்ளியணை போலிசார் என்னை தொடர்பு கொண்டு திருச்சி பைபாஸ் ரோடு, லிங்கத்தூர், கோலிசோடா டீக்கடைக்கு அருகில் நிறுத்தியிருந்த R15 v4 இருசக்கர வாகனத்தை திருடிய இரண்டு நபர்களை கைது செய்துள்ளதாகவும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டும் என்று போலிசார் கூறியதன் பேரில் நானும், சரவண செல்வம் என்பவரும் வெள்ளியணை காவல் நிலையம் சென்றோம் என்றும், அப்போது அங்கிருந்த சிவக்குமார் (எ) கிஷாபாய் என்பவரை எங்கள் முன்னிலையில் 12.15 மணிக்கு விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், 06.30 மணிக்கு மாங்காசோளிபாளையத்திலுள்ள பாறைக்குடியில் மறைத்து வைத்திருந்த 13 பவுன் எடையுள்ள தங்க நகைகளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நானும், சரவண செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

02.08.2024ம் தேதி போலிசார் எங்கள் முன்னிலையில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், கைப்பற்றுதல் மகசரில்

கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதல்ல. 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் காவல் நிலையம் சென்றிருந்தபோது, எழுதாத வெள்ளைத்தாளில்தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் வெள்ளை தாளில் கையொப்பம் செய்தபோது என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரியிடமிருந்து எந்த ஒரு இருசக்கர வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வெள்ளை தாளில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 546/2024

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சரவண செல்வன் |
| Father's Name | : | குப்புசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உப்பிடமங்கலம், புதுகஞ்சமனூரில் குடியிருந்து கேஎஸ்எம் கொசுவலை கம்பெனியில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சொந்த வேலையாக நேரம் ஞாபகமில்லை, வெள்ளியணை காவல் நிலையம் சென்றிருந்தேன். அங்கு

போலிசார் ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 2.08.2024ம் தேதி நான் வீட்டிலிருந்தபோது வெள்ளியணை போலிசார் என்னை தொடர்பு கொண்டு திருச்சி பைபாஸ் ரோடு, லிங்கத்தூர், கோலிசோடா டீக்கடைக்கு அருகில் நிறுத்தியிருந்த R15 v4 இருசக்கர வாகனத்தை திருடிய இரண்டு நபர்களை கைது செய்துள்ளதாகவும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டும் என்று போலிசார் கூறியதன் பேரில் நானும், தனபால் என்பவரும் வெள்ளியணை காவல் நிலையம் சென்றோம் என்றும், அப்போது அங்கிருந்த சிவக்குமார் (எ) கிஷோபாய் என்பவரை எங்கள் முன்னிலையில் 12.15 மணிக்கு விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், 06.30 மணிக்கு மாங்காசோளிபாளையத்திலுள்ள பாறைக்குடியில் மறைத்து வைத்திருந்த 13 பவுன் எடையுள்ள தங்க நகைகளை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் நானும், சரவண செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

**இல்லை.**

**என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.**

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**